ந.க.எண்.387/2021/அ1

நாள்: 22.12.2022

கோயம்புத்தூர் மாவட்டம்

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம்

## அறிவிக்கை (Notification)

### அலுவலக உதவியாளர் காலிப்பணியிடத்திற்கான நேரடி நியமனம்

கோவை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் காலியாக உள்ள 1 அலுவலக உதவியாளர் பணிக்காலியிடத்தினை நேரடி நியமனம் மூலம் நிரப்பிட தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**காலிப்பணியிட விவரம்**

| வஎண் | பதவி | காலிப்பணியிடத்தின் எண்ணிக்கை | இனசுழற்சி |
|---|---|---|---|
| 1. | அலுவலக உதவியாளர் | 1 | GT-Priority (பொது – முன்னுரிமை) |

**கல்வித் தகுதி மற்றும் இதர தகுதிகள்:** 8 ஆம் வகுப்பு தேர்ச்சி

**முன்னுரிமை பிரிவினர் மட்டுமே இப்பணிக்காலியிடத்திற்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர் ஆவார். முன்னுரிமை உடைய மனுதாரர்களில் அரசாணை நிலை எண்.122 மனித வள மேலாண்மைத் (கே2) துறை நாள்: 02.11.2021 –இன் கீழ் ஆணையிடப்பட்டவாறு, முன்னுரிமை வரிசை முறையை பின்பற்றி மட்டுமே பணிக்காலியிடம் நிரப்பப்படும்.**

**வயது வரம்பு 01.07.2022 அன்றின் படி**

| வஎண் | பிரிவு | குறைந்த பட்ச வயது வரம்பு | நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அதிகபட்ச வயது வரம்பு |
|---|---|---|---|
| 1 | பொது பிரிவு | 18 | 32 |
| 2 | பிற்படுத்தப்பட்ட /மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் /பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முஸ்லீம் | 18 | 34 |
| 3 | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் | 18 | 37 |

** மேற்கண்ட அதிகபட்ச வயது வரம்பு பூர்த்தியடைந்தவராக இருக்கக் கூடாது.

** முன்னுரிமை பிரிவினருக்கு அரசு விதிமுறைகளின் படி உச்ச வயது வரம்பில் தளர்வு உண்டு

__விண்ணப்பங்கள் பெறப்படும் நாள்: 23.12.2022 முதல் 09.01.2023 மாலை 5.45 மணி வரை__

| வ எண் | பணியின் விவரம் | ஊதியம் |
|---|---|---|
| 1 | அலுவலக உதவியாளர் | ரூ.15700-50000/- |

__நிபந்தனைகள்:__

1. விண்ணப்பதாரர்கள் கல்வித் தகுதி, இருப்பிடம், சாதிச்சான்று, முன்னுரிமைச் சான்று ஆகியவைகளுக்கு ஆதாரம் கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.
2. இனசுழற்சி (முன்னுரிமை), வயது மற்றும் கல்வித் தகுதியற்ற நபர்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. அரசு விதிகளின் படி மேற்குறிப்பிட்ட இனசுழற்சி முறை பின்பற்றி நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.

தேர்வு செய்யப்படும் நபர்களுக்கு அரசாணை எண். 303, நிதி (ஊதியக்குழு) துறை நாள்: 11.10.2017, அரசாண எண். 305, நிதி(ஊதியக்குழு) துறை நாள்: 13.10.2017-இன் படி ஊதியம் மற்றும் அனுமதிக்கப்பட படிகள் வழங்கப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை **09.01.2023 பிற்பகல் 5.45 மணிக்குள்** கீழ்க்கண்ட முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்ப வேண்டும். __மாறாக பிறகு காலதாமதாக பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.__

துணை இயக்குநர்
மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும்
தொழில்நெறி வழிகாட்டும் மையம்
அரசினர் தொழிற் பயிற்சி நிலைய வளாகம்
கோயம்புத்தூர் – 64102

தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம் மற்றும் தேதி குறித்து நேர்காணல் கடிதம் (Call Letter) பின்னர் அனுப்பி வைக்கப்படும்.

அலுவலக உதவியாளர் காலிப்பணியிடத்திற்கான விபரங்கள் மற்றும் விண்ணப்ப படிவம் கோயம்புத்தூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்திலும் மற்றும் மாவட்ட இணையதளம் Coimbatore.nic.in என்ற இணையதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சியர் டாக்டர்.ஜி.சமீரன் அவர்கள் அறிவிக்கிறார்.